# ஐ. தே. கட்சிக்குள் கருத்துப் போராடடம்?

விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 110

யாழ்ப்பாணம் வைகாசி 20 ஜ. அல். 11 திங்கட்கிழமை 3-6-74

கொழும்பு, ஞாயிறு ஐக்கிய தேசியக்கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதத் தொடங்கியிருக்கிறார்கள்.

பல்வேறு தேர்தல் தொகுதிகளிலும் கட்சியின் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து இந்த நிலைமை உருவாகியிருப்பதாகத் தெரிகிறது. இப்படி நியமிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடவிருப்பவர்கள் என்று கருதப்படுகின்றது.

இந்தப் பதவிகளுக்கு காலஞ்சென்ற டட்லி சேனநாயக்காவின் ஆதரவாளர்களை ஒதுக்கிவிட்டுப் பெரும்பாலும் திரு. ஜயவர்த்தனாவின் ஆதரவாளர்களே நியமிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

திரு. ஜயவர்த்தனாவின் ஆதரவாளர்களின் ஆதிக்கம் கட்சியில் மேம்படாமல் தடுக்கவும் முன்பிருந்த தமது நிலைகளை நிலைநிறுத்திக் கொள்ளவும் காலஞ்சென்ற திரு. டட்லி சேனநாயக்காவின் ஆதரவாளர்கள் இப்பொழுதும் போராடத் தொடங்கியிருக்கிறார்களாம்.

இதேசமயம் கட்சியின் முக்கிய பொறுப்புகளில் இடம் பெறுவதற்குக் கட்சி உறுப்பினர்களான இளைஞர்கள் விரும்புவதாகவும் தெரிகின்றது. (சி. பி. ஏ.)

# கலைஞர்கள் ஆய்வு நடத்த வடக்கில் நவீன மண்டபம்

## அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுப்பார்

ஆனைக்கோட்டை, ஞாயிறு "ஓவியம், சிற்பம், இசை, நடனம் முதலாம் கலைகள் பற்றிக் கலைஞர்கள் சேர்ந்து ஆய்வுகள் நடத்துவதற்கு வடபகுதியில் ஓர் இடமில்லாதது கவலைக்குரியதாகும். இதற்கென நவீன மண்டபமொன்று அமைப்பது பற்றி ஆலோசனை நடத்தவிருக்கிறேன்."

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல்அமரசேகரா நல்லூரிலுள்ள யாழ். திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்று வரும் இளங்கலைஞர் மன்ற இசைவிழா 9-ம்நாள் நிகழ்ச்சிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வறிய கலைஞர்கள் பற்றித் தாம் ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவித்த அரசாங்க அதிபர் கலாச்சார நிலையங்களுடன் தாம் தொடர்புகொண்டு இவற்றை நிறைவேற்றித் தருவதாகவும் உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இளங்கலைஞர்களின் முன்னேற்றத்திற்கு இளங்கலைஞர்

4-ம் பக்கம் பார்க்க

## கையெழுத்து மோசடி: அமைச்சரின் மனைவிசாட்சியம்

மட்டக்களப்பு, ஞாயிறு அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் அந்தரங்கச் செயலாளரான திருமதி மனோரஞ்சிதம் சேனநாயக்காவின் பொய்க்கையெழுத்தைப் போட்டு மோசடிசெய்ததாகபட்டிருப்புத்தொகுதியைச் சேர்ந்த ஒந்தாச்சி மடம் ஸ்ரீ. ல. சு. கட்சி கிளைக் காரியதரிசியான ரி. நேசராசா என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு மட்டக்களப்பு நீதிபதி திரு மு. சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திமருதி சேனநாயக்காவின் கையெழுத்தைப் போட்டு நபர்ஒருவருக்கு வேலைவழங்குமாறு சந்தேகநபரான ஸ்ரீ. ல. சு. கட்சி கிளைக்காரியதரிசி கிழக்குப் பிராந்திய வேலையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. என். ஜி. தாமோதரத்துக்கு கடிதம் அனுப்பியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவ்வழக்கில் அமைச்சரின் மனைவியான மனோரஞ்சிதம் சேனநாயக்கா சாட்சியமளித்தார்.

குறிப்பிட்ட கடிதம் தம்மால் எழுதப்படவில்லை என்றும், அக்கடிதத்தில் உள்ள தமது பெயரிலான கையொப்பம் தம்மால் இடப்படவில்லை என்றும் திருமதி சேனநாயக்கா தமது சாட்சியத்தில் கூறினார்.

மேல்விசாரணை ஜூன் 14ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வேலை செய்துகொண்டே

## சம்பளம் வாங்காமல் சாத்வீகப் போராட்டம்

வண்ணார்பண்ணை, ஞாயிறு வேலைசெய்துகொண்டு சம்பளம்பெறாத சாத்வீகப் போராட்டமொன்றை வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிரந்தர ஊழியர்கள்இம்மாதம்முதல் ஆரம்பித்துள்ளனர். இச்சங்கத்தின் நிரந்தர ஊழியர்கள் 14 பேர் இப்போராட்டத்தில் கலந்துள்ளனர்.

1972-ம் ஆண்டு சித்திரை மாதம் 15009/12ம் இலக்க வர்த்தமானியின்படி 1-4-72 திகதி முதல் அமுல் நடத்தப்படவேண்டிய சம்பளம் இதுவரை இச்சங்கத்தால் தமக்கு கொடுக்கப்படாததால் மேற்படி சட்டப்படி சம்பளப்பட்டியல் தயாரிக்கும்வரைதாம் சம்பளம்பெறுவதில்லை என்று இவர்கள் சங்கப் பொதுமுகாமையாளர் ஊடாக இயக்குநர்களுக்கும், கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் அறிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து இதுபற்றி ஆராயும் முகமாக இச்சங்க இயக்குநர்

(4-ம் பக்கம் பார்க்க)

## புதுக்கட்சி ஆரம்பித்தார் சத்தியவாணிமுத்து

சென்னை, ஜூன் 2 முன்னாள் அரிஜனத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் அவர் ஆரம்பித்துள்ள இக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காகப் பாடுபடுமென்று அவர் அறிவித்துள்ளார். தமது கட்சியின் கொடி மூவர்ணங்களைக் கொண்டதாய் இருக்குமென்று கூறிய திருமதி சத்தியவாணிமுத்து, கறுப்பு, சிவப்பு, வெளிறிய நீலம் ஆகிய நிறங்களைக் கொண்ட இக்கொடியில் ஒவ்வொரு நிறத்தின் நடுவிலும் வெள்ளை நிற நட்சத்திரம் இருக்குமென்றும் கூறினார்.

காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்காரின் கொள்கைகளைப் பின்பற்றி இக்கட்சி செயல்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை ஆட்சியிலிருந்த கட்சிகளிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை விளையவில்லையென்றும் அதனாலேயே புதிய கட்சி ஆரம்பித்ததாகவும் திருமதி சத்தியவாணிமுத்து கூறியிருக்கிறார்.

## சி. ஏ. எஸ். பரீட்சையில் சித்திபெற்றோர்

கொழும்பு, ஞாயிறு கடந்தஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாகசேவை 2ம் தரப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் சித்திபெற்றவர்களில் சிலராவர்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. ஆர். யோகநாதன், யாழ்ப்பாணம் திட்டமிடல் உதவி அதிகாரி திரு. கே. சண்முகலிங்கம் மற்றும் திரு. எஸ். குணரத்தினம், செல்வி எஸ். சபாரத்தினம், திருவாளர்கள் எம். அந்தோனிமுத்து, கே. தயாபரன் கே. எஸ். அருளானந்தம், என். பத்மநாதன், [illegible] டி. வாமதேவன், [illegible] எம். பஞ்சலிங்கம், எஸ் கணேசானந்தன். (ச)

## மரண அறிவித்தல்

### ஆ. மயில்வாகனம்

(விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

யாழ்ப்பாணம் விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் ஆ. மயில்வாகனம் காலமாகிவிட்டார். இவர் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், விவேகானந்தன் விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்) உள்ளக்கமலம் ஆகியோரின் தந்தையும், தனபாலசிங்கம் (ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி) கௌரிதேவி ஆகியோரின் மாமனுமாவர். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக கொக்குவில் கிழக்கில் உள்ள இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

52

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் ஆனந்த ஆண்டு வைகாசித்திங்கள் 23-ம் நாள் (6-6-74) வியாழக்கிழமை இரவு 9-07 முதல் 10-40 மணிவரையுள்ள மகரலக்கினமும் மூலநட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில்

எங்கள் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **ஜெயமாலா** அவர்களுக்கும்

திருநிறை செல்வன் **தம்பிராஜா** (பொறியியலாளர்- கிழக்கிலங்கை சடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் வாழைச்சேனை) அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை

239/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் அன்புள்ள இ. செல்லப்பாவும் பாரியாரும் (உரிமையாளர்: செல்லப்பா அன் கம்பனி)

4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

**கல்வி**

நவீன கணிதம், (தமிழில்) 6-ம் 7-ம், 8-ம், தேசிய கல்வித் தராதர வகுப்புகளுக்கும், பயிற்சிக் கலாசாலை ஆசிரியருக்கும் தபால்மூலம் போதனை மொடேர்ண் எடியூகேஷன் சென்ரர், நெல்லியடி, கரவெட்டி. 132

இலங்கை சித்த ஆயுர்வேத கல்லூரியில் சேர்வதற்கான பாடத்திட்டத்தை ரூபா 5/-க்கு தபால்கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பதிவாளர், ஆயுர்வேத கல்லூரி, கிரான்லி வீதி, யாழ்ப்பாணம். 174

**விற்பனைக்கு**

மாணவ மாணவிகளுக்கு அடையாள அட்டைப் படங்கள் அரைச்சலாரில் 1-6-74 தொடக்கம் செய்து கொடுக்கப்படும். உரிமையாளர் M. நடராஜா, ஸ்ருடியோ பிறின்சஸ் சுன்னாகம். 212

பளை தன்மக்கேணியில், பயன்தந்துகொண்டிருக்கும் தென்னை, முந்திரிகை, 20 ஒட்டுமாமரங்கள் ஆகியவை கொண்ட 24½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. யோகானந்தம், 194, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 226

எங்களிடம் எல்லாவிதமான மரக்கறிவிதைகள், உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரீ. சண்முகநாதன் அன்கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் No. 718. 230

நல்ல பாவிப்பில் உள்ள பொக்கெற் கெடிகாரம் ஒன்றும், 4 அடி நீளமுள்ள புலித்தோல் ஒன்றும் விலைக்குத் தேவை. இருந்தால் எம்மைத் தொடர்புகொள்ளவும். கற்பகத்தரு, 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 203

**விற்பனைக்கு**

ஆரம்பம் முதல் ஒருவரால் பாவிக்கப்பட்ட ஈ. என் தொடர் இலக்க மொரிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. இராசா சயிக்கிள் வேர்க்ஸ், தெல்லிப்பழைச் சந்தி. 232

யாழ். நகரில் 3 பரப்புக் காணியுடன் நவீனவசதிகளுடன் கூடிய புதிய வீடு விற்கப்படும். தொடர்புகொள்க. சட்டத்தரணி தம்பிமுத்து பூபாலன், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 234

**காணவில்லை**

உடுவில் வெ. ஏகாம்பரநாதன் வீட்டிலிருந்து மகள் சரோஜா, வயது 14, 20-5-74ல் இருந்து காணவில்லை. இவரது தாயார் காளியம்மா இதனால் கடும் சுகவீனம் அடைந்துள்ளார் இப்பிள்ளையின் தகவல் தெரிந்தோர் தயவுசெய்து எமக்கு அறிவிக்கவும் V. சண்முகம் (முனியாண்டி), சவுதாம் தோட்டம், தெமோதரை. 233

உடுப்பிட்டி, ஞாயிறு புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் 1-6-72க்கும் 31-5-73க்கும் இடைப்பட்ட நிதிவருடத்தில் 22705 ரூபா 4 சதத்தை இலாபமாக ஈட்டியுள்ளது. (ஈ)

## சாவகச்சேரி நகரசபை

# கேள்விப்பத்திர விளம்பரம்

கீழே விவரிக்கப்படும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு இந்நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:

### வேலைகள்

1. சபையின் இரும்புப்பெட்டியைச் சுவருடன் சேர்த்துக் கட்டுவதற்கும் காசாளருக்கு சுற்றிவர மரத்திலான கூடு அமைப்பதற்கும், (கே)
2. 2-ம் வட்டாரம்:
   - (அ) சாளைபோடுதுரவு வீதி திருத்தம் (மண்வேலை) (கே)
   - (ஆ) மாவடிவிநாயகர் வீதி திருத்தம் (மண்வேலை) (கே)
   - (இ) உலகவெளிவீதி திருத்தம் (மண்வேலை) (கே)
   - (ஈ) சாளைபோடு துரவு வீதி திருத்தம் (கிறவல்) (கே)
   - (உ) மாவடி விநாயகர் வீதி திருத்தம் (கிறவல்) (கே)
   - (ஊ) உலகவெளி வீதி திருத்தம் (கிறவல்) (கே)
3. 3-ம் வட்டாரம்:
   - (அ) மீசாலை அம்மன்வீதி திருத்தம் (கே)
   - (ஆ) குசவன்மடம் 2-ம் ஒழுங்கை திருத்தம் (கே)
   - (இ) மீசாலை அம்மன் வீதி (கோட்டேசன்)
   - (ஈ) கெருடாவில் அம்மன் வீதி (கோட்டேசன்)
4. 6-ம் வட்டாரம்:
   - மாகசல் வீதி திருத்தம் (கே)
5. 7-ம் வட்டாரம்:
   - கற்குளி 1-ம் வீதி திருத்தம் (கே)
6. 8-ம் வட்டாரம்:
   - (அ) வீரபத்திரர்வீதி திருத்தம் (கே)
   - (ஆ) பண்டிதர் பேரம்பலம் வீதி திருத்தம் (கே)
   - (இ) ஆர். சீ. சேச் வீதி திருத்தம் (கே)
7. 9-ம் வட்டாரம்:
   - செருக்கல்பிள்ளையார் வீதி திருத்தம் (கே)

கேள்விப்பத்திரங்கள் 17-6-74ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் தகுந்த உறைக்குள் வைக்கப்பட்டு, உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக அவ்வவ் வேலைக்குரிய பெயரைஎழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகுபோட்டு அடையாளம் வைத்து 1974-ம் ஆண்டு ஆனிமாதம் 19-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப்பெட்டிக்குள் போடவேண்டும், அல்லது தபால் மூலம் பதிவுசெய்து அனுப்பவேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம். 19-6-74ந் திகதி முற்பகல் 10-00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

சு. கனகரத்தினம்
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 28-5-74. 46

## கிருத்தியப் பூசைகள்



19-5-74 ஞாயிற்றுக்கிழமை இரவு ஆ. அம்பலவாணர் அவர்கள் சிவபதம் அடைந்தார்கள். இவர் தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும் வீரகத்திப்பிள்ளை அராலி மேற்கு (சிதம்பரம், சிவபுரி மடம் மடாதிபதி); முத்துக்குமாரசாமி (சிதம்பரம், ஆறுமுகநாவலர் சித்தாந்தக்கல்லூரி மாணவர்); அமுதவல்லி இந்திராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரம், சிவபுரிமடம் மடாதிபதி சு. சுப்பிரமணிய தம்பிரானின் மைத்துனரும், சிதம்பரம் வடக்கு மடம் சிவராசனின் மாமனாரும், சாந்தியின் தாத்தாவும் ஆவார். 16ம்நாளாகிய இன்று 3-6-74 வீட்டுக் கிருத்தியப் பூசைகள் நடைபெறுகின்றன. த. சிவசுப்பிரமணியம், 'தாமரைப்பிட்டி', தொல்புரம், சுழிபுரம். 43

பிஸ்கால் அலுவலகம்,
மாவட்ட நீதிமன்றம்,
முல்லைத்தீவு,
28-5-74.

இலக்கம் 2849
முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்.

வி. எஸ். தம்பையா கை. பெ. சரோசினிதேவி கள்ளப்பாடு, முல்லைத்தீவு
வழக்காளி

விரோதமாக

எல்லுப்போலை வைரவப்பிள்ளை, கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
எதிராளி

இதன்கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் எதிராளிக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1974-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீழ்க்காணும் தொகையை அறவிடுவதற்கு காணியில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதாவது:-

**ஆதனவிபரம்**

வடமாகாணம், வவுனியா மாவட்டம், கரைதுறைப்பற்று, சரிக்கட்டுமூலை வடக்கு முல்லைத்தீவிலுள்ள 'மணல்காடு அல்லது மணற்காடு" என்னும் ஆதனம். இதன் விஸ்திரணம் கிழக்குப் பக்கம் 37 அடி, தெற்குப்பக்கம் 32 யார், மேற்குப் பக்கம் 26 அடி, வடக்குப்பக்கம் 32யார்.

**எல்லைகள்**

கிழக்கு: ரோட்டோடுஅடுத்து இணைந்த ஆதனம்.

தெற்கு: சின்னத்தம்பி சிவகுரு மயில்வாகனம் பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம்.

மேற்கு: சங்கரப்பிள்ளை ஆறுமுகத்தின் ஆதனம்.

வடக்கு: ஒட்டுசுட்டான் கோயிலுக்குரிய ஆதனம்

இவ்வெல்லைக்குட்பட்ட சகலதும் வழிப்பாவிப்பு உரித்தும், இதனுள் அடங்கியவையும்.

அறவிடப்படும் தொகை
முதல்ரூபா 11,500/-
வழக்குச்செலவு ரூபா 350/-
கொமிஷன் செலவு ரூபா 15/-

பிஸ்கால் செலவும், பவுண்டேச்சும் அறவிடப்படும்.

சி. நடராசா
பிஸ்கால்
முல்லைத்தீவு. 40

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
**கலியுககாலம்**

**ஸ்ரீ கிருஷ்ணா** [பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர்-சுந்தரராஜன்
**நம்ம குழந்தைகள்**

REGAL Jaffna
Daily 4-45, 7-00, 9-30pm
Richard Jhonson
A TWIST OF SAND
(color)
From 13-6-74
LIVING FREE

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
நாகேஷ் — விஜயா
**கல்யாண ஊர்வலம்**

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 2 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
**றியோ** (யாழ் நகரமண்டபம்)
தினசரி 5 காட்சிகள்
**CHRIST OF THE OCEAN**
**சமுத்திரத்தின் யேசு பெருமான்**
இன்று 9-45 மட்டும் PORT YUM & GOLD
5-ந்திகதியிலிருந்து MR. JERICO 9-45 only


**ராஜா** (யாழ்ப்பாணம்)
சிவாஜி-எஸ்.எஸ்.ஆர். கண்ணாம்பா நடித்த
காலை 10-30, 2-30 மாலை 6-30, இரவு 9-15
**மனோகரா**

**ஸ்ரீதர் சினிமா** (யாழ்ப்பாணம்)
கொழும்பிலே 25 வாரத்துக்கு மேல் ஓடிய சித்திரம்
தினசரி 4 காட்சிகள்
**த பொடி THE BODY**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ராணி சினிமா** [யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ராஜன் மேஜர் சுந்தரராஜன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
**அன்புச் சகோதரர்கள்**
சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா நடித்த
**அன்னமிட்டகை**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30



**ராமன் தேடிய சீதை**
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

**லிடோ** [யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-00, பி. ப. 2-00,
மாலை 6-00, இரவு 9-00
முத்துராமன் - ஜெயலலிதா
**சூரியகாந்தி**

உற்...
யாழ்ப்... நயினாதீவு... ஆலய உற்... வெள்ளி... எதிர்வரும்... விஷேச... விழா பூர்த்...

செயல்...
தய...
வே...

கலாப...
அங்குரா...

வெ...
[மா...
தினசரி...
சனி, ஞாயி...
எம். ...
ரத்தக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்
...பிறைதீவு பிடாரி அம்மன்
...ய உற்சவம் கடந்த
...ள்ளி ஆரம்பமானது.
...ர்வரும் சனிக்கிழமை
...ஷச பொங்கலுடன்
...ர் பூர்த்தியடையும்.

0 0 0

...ழ். வண்ணை கின்னர்
...ங்கை சர்வசக்தி பகாமரி
...பாள் கோவில் அலங்கார
...சவமும் கடந்த வெள்ளிக்
...மை ஆரம்பமானது.
...பன்று தேர்திருவிழாவும்
...த்தநாள் தீர்த்தமும்
...ம் திகதி வைரவர் மடை
...நடைபெறும்.

0 0 0

கரவெட்டி, ஞாயிறு
...நல்லியடி தடங்கன்
...படி முருகமூர்த்தி ஆலயத்
... வருடாந்த உற்சவம்
... வரும் 4-ம் திகதி நடை
...வும் ரதோற்சவத்துடன்
...வடையும்.

0 0 0

...ண்ணை ஸ்ரீ கதிரேசப்
...மான் விசாகத் திருவிழா
...வரும் செவ்வாயன்று
...பெறும்.
...திப்பாடல்கள், கதாப்
...ங்கம், வில்லிசை நிகழ்ச்
...ம் இடம்பெறவுள்ளன

0 0 0

...மாவிட்டபுரம், ஞாயிறு
...விட்டபுரம் ஸ்ரீ முருகன்
...வில் தீர்த்தத் திருவிழா
...வரும் செவ்வாயன்று
...விருக்கிறது.

0 0 0

சுழிபுரம், ஞாயிறு
...பிபுரம் - பறாளாய் சிவ
...பிரமணிய சுவாமி
...வில் தேர்த்திருவிழா
...று நடைபெறுகிறது. (அ)

## ...செயல்படுதிட்ட தயாரிப்பு வேலைகள்

...ண்ணை பண்ணை, ஞாயிறு
...ழ். மாவட்டத்தின்
... ஆண்டுக்கான செயற்
...திட்டம் தயாரிக்கும்
...கள் தற்பொழுது தயா
... கொண்டிருக்கின்றன.
... மாவட்டத்தின் 75-ம்
...டுக்கான குடியேற்றத்
...ங்களை கணக்கிடவும்.
...வு மதிப்பீடுகளைக் கணக்
...ம் செயல்படுத்தவும்
...செயல்ப்படுதிட்டம் தயா
...படுகிறது.
...ழ் மாவட்ட அரசாங்க
...ரின் மேற்பார்வையில்
...வு உற்பத்திக்கிளை இதற்
... ஏற்பாடுகளைச் செய்து
...ன்றது. இச் செயற்படு
...ம் தயாரிக்கும் படிவங்
... தற்பொழுது யாழ்.
...ட்டத்தில் உள்ள சகல
...ாதிகாரி அலுவலகங்க
...ம் அனுப்பப்பட்டுவரு
...ன. இன்னும் ஒருமாத
...த்தின்பின் இத்திட்டம்
...னை செய்யப்பட்டு
...விடப்படவிருக்கிறது.

## ...லாமன்றம் ...குரார்ப்பணம்

...கொழும்பு, வெள்ளி
...புக்தளை தமிழ்மகா
...யாலயத்தின் கலா
... அங்குரார்ப்பணக்
...ம் வித்தியாலய அதிபர்
... எஸ். தேவதாசன்
...மையில் நடைபெற்றது.
...வர்களை எதிர்காலத்
...நாட்டின் நற்பிரஜை
...வும் சிறந்த தலைவர்
...வும் உருவாக்குவதற்கு
... கலாமன்றம் சிறந்த
...யில் பணியாற்ற
...டுமென்று அதிபர்
... உரையில் குறிப்பிட்
(க. அ)


...வெஸ்லி
[மானிப்பாய்]
...சரி 6-30, 9-30
... ஞாயிறு பி.ப. 2-30
...எம். ஆர். ராதா
ரஞ்சனி
...ந்தக்கண்ணீர்


# பூட்டான் மன்னருக்கு முடிசூட்டு விழா

திம்பு, ஜூன் 2

பூட்டான் மன்னர் வான்சுவானுக்கு இன்று முடிசூட்டு விழா நடைபெறுகின்றது.

இளைஞரான மன்னரைக் கொலை செய்ய சதியொன்று நடைபெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக 30 பேர்வரையில் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மன்னரின் தந்தையாருடன் முன்பு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த திபேத்திய பெண் ஒருவரின் மகனை மன்னராக்கும் நோக்கத்துடனேயே மன்னர் பொன்சுவான் கொலைசெய்யப்படவிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமாகும் முடிசூட்டு விழாவைபவங்கள் தொடர்ந்து மூன்றுநாட்களுக்கு நடைபெறவிருக்கின்றன.

முடிசூட்டுவிழாவில் கலந்து கொள்ள பலநாடுகளின் தலைவர்கள் பூட்டானின் தலைநகருக்குவந்து சேர்ந்துள்ளனர்.

இந்திய ஜனாதிபதி திரு வி. வி. கிரி, நேபாள மன்னர் விரேந்திரா, பங்களாதேஷ் அதிபர் ஜனாப் மகமதுல்லா ஆகியவர்கள் குறிப்பிடக்கூடியவர்கள் இலங்கை, அவுஸ்திரேலிய நாட்டுப்பிரதிநிதிகளும் வந்து சேர்ந்துள்ளனர்.

# பாக். இரு பிரிவினருக்கு இடையில் மோதல்

## 9 பேர் பலி; பலர் காயம்

கராச்சி, ஜூன் 2

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாகவே நடைபெற்று வந்துள்ள கோஷ்டி சண்டைகளின் காரணமாக 9 பேர் வரையில் பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

முஸ்லிம்களின் இருபிரிவினர்களுக்கிடையில் இந்த மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றது குஜரவாலா என்ற நகரில் நேற்று நடைபெற்ற மோதலின்போது துப்பாக்கிச்சூட்டுக்கு 5 பேர் பலியானார்கள். 100 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

ஒரு நகரில் முதலில் ஏற்பட்ட இக்கலவரம் தலைநகர் இஸ்லாமாபாத் உட்பட பல நகர்களுக்குப் பரவியதில் ...களும் கூட எரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

சில எல்லைப்புற நகர்களுக்கு கலவரம் பரவியதாகக் கூறப்படுகின்றது.

கலவரங்களை அடக்க பாகிஸ்தான் அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## முள்ளிவாய்க்காலில் வெற்றிலைச் செய்கை

முல்லைத்தீவு, ஞாயிறு

வவுனியா மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால் கிராமத்தில் வெற்றிலைச் செய்கை ஆரம்பிக்கப்படவிருக்கின்றது இதற்கான நடவடிக்கைகளை முல்லை. உதவி அரசாங்க அதிபர் திரு. சு. ஜெயகாந்தன் செய்துவருகின்றார். (அ)

## இந்தியநிபுணர் பயிற்சியளித்தார்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

காணி விவசாய அமைச்சில் கடமையாற்றும் இந்திய விவசாய ஆராய்ச்சியாளர் திரு. எஸ். பி. குப்தா தற்பொழுது யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுவருகின்றார்.

திருவையாறு படித்தவாலிபர் திட்டத்தில் உள்ள வாலிபர்களுக்கு உழவு யந்திரப் பாவிக்கும் முறைகள் பற்றியும் யந்திரமூலம் மண்பதப்படுத்தும் முறைகள் பற்றியும் திரு. குப்தா பயிற்சியளித்தார். மூன்றுவார காலப் பயிற்சியில் 18 வாலிபர்கள் பயிற்சி பெற்றனர் யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாயத் திட்டங்களையும், பண்ணைகளையும் இவர் பார்வையிட்டார்.

## இன்றைய இசைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா இன்றுடன் முடிவடைகிறது. கடந்த 24-ம் திகதி இவ்விசைவிழா நல்லூரிலுள்ள யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்றைய நிகழ்ச்சிகள் மூளைநரம்பு சத்திர சிகிச்சை நிபுணர் என். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறுகிறது. (அ)


அன்பளிப்புப் பொருட்கள் !!

அழகிய நவீன வேலைப்பாடுகள் அமைந்த
மினுக்கிய மட்பாண்டங்கள்
(GLAZED POTTERY)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ஜெனரல் ஏஜென்ஸீஸ் லிமிடெட்.,
3, ஸ்டான்லி றோட் -- யாழ்ப்பாணம்.


டிறிபேர்க்கல்லூரி, சாவகச்சேரி
### பழையமாணவர் சங்கம்

வருடாந்தக் கூட்டமும் இராப்போசனமும்
சனிக்கிழமை. 8-6-74. பி.ப. 3-00 மணி
பிரதம விருந்தினர்:
உயர் நீதிபதி திரு. T. J. இராசரத்தினம்
அவர்கள்
இராப்போசனக்கட்டணம்: 6/- (துணையுடன் 10/-)
வருடாந்தச் சந்தாப்பணம்: 2/-
மேற்படி கட்டணங்கள் அனுப்பப்படவேண்டிய விலாசம்: திரு கே. வேலுப்பிள்ளை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

பி. குலராசசிங்கம்
ஏ. எஸ் பாலரத்தினம்
இணைச்செயலாளர்.

30-5-74.

# யு. எஸ். தலைவர்களுடன் ஐ. நா. பொதுச்செயலாளர் ஆலோசனை

## அடுத்தவாரம் மேற்காஸியா பயணம்

நியுயோர்க், ஜூன் 2

ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் வால்ட்ஹெய்ம் அடுத்தவாரம் வாக்கில் மேற்காஸியா விஜயம்செய்யவிருப்பதை யொட்டி நேற்று அமெரிக்க அதிபர், நிக்ஸனையும் வெளிநாட்டமைச்சர் டாக்டர் ஹென்றி கிஸிங்கரையும் சந்தித்துப் பேசினர்.

கோலான் குன்றுப் பகுதியில் ஐ.நா.படைகள் இன்னும் ஒருவாரத்தில் யோய்ச் சேரும் என்று டாக்டர் வால்ட்ஹெய்ம் கூறினர்.

இதேசமயம் ஜெனிவாவில் இஸ்ரேல்-சிரியா பிரதிநிதிகள் சந்தித்துப்பேசியிருக்கிறார்கள். படைவிலக்கல் ஒப்பந்தம் செயல்படுத்தப்படுவது சம்பந்தமாக இந்த இருநாட்டு ராணுவப்பிரதிநிதிகளும் ஆலோசனை நடத்தினர்கள்.

இருநாடுகளுக்குமிடையில் ஏற்கனவே கைதிகள் பரிமாற்றம் ஆரம்பமாகியுள்ளது.

## மின்சார வசதி கிடைக்கும்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டிக் கிராமசபை சில வட்டாரங்களுக்கும் மின்சார விநியோகஞ்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இம் மின்சார விநியோக வேலைகளை இலங்கை மின்சாரச் சபை பொறுப்பேற்றுச் செய்துவருகின்றது. உடுப்பிட்டிக் கிராம சபைக்கு மின்சார இணைப்புக் கிடைத்ததும் தற்போதுமின்சார சபையின் கீழ் நேரடியாக மின்சாரம் பெற்றுவரும் சில பகுதிகளும் கிராமசபையின் பரிபாலனத்தின் கீழ் ஒப்படைக்கப்படும்.

## எம். பி. கோரிக்கை

வேலணை, ஞாயிறு

ஊர்காவற்றுறைத் தன்னியக்கமாற்றி ஓயாமல் பழுதடைகின்றபடியால் இந்த தன்னியக்க மாற்றியை அகற்றிவிட்டுப் புதியதொன்றினை நிறுவுமாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் தபால் அமைச்சரிடம் கோரியுள்ளார். (அ)

## 'துரித முன்னேற்றம்'

கரவெட்டி, ஞாயிறு

'புதிய கல்வித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னிலைக் கல்வியின் பலனைத் தற்போது பாடசாலைகளின்மூலம் பெறப்பட்ட மதிப்பேடுகளிலிருந்து எவ்வளவு துரிதமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

## ஆலோசனைக்குழு இல்லாதகிளை

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழியங்கும் கரணவாய் தெற்கு விசேடம் '2' கிளைக்கு ஒரு வருடத்திற்கு மேலாக ஆலோசனைக்குழு நியமிக்கப்படவில்லை யென்றும், இக்கிளைக்கடையைத் தற்போதைய நிர்வாகம் புறக்கணித்து வருவதாகவும் கூட்டுறவு ஆணையாளரிடம் பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

எதிர்வரும் 9-6-74-ம் திகதி உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுக்கூட்டமும், இயக்குநர் தேர்தலும் நடைபெறவுள்ளது.

ஆனால், கரணவாய் தெற்கு விசேட கிளைக்கு இன்னும் ஆலோசனைக்குழு இல்லாமையால் இப் பொதுக்கூட்டத்தில் இக்கிளை உறுப்பினர்கள் பங்குபற்ற முடியாது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் இக்கிளை உறுப்பினர்கள் விவசாயக்கடன் பெற முடியாது புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆதலால் உடனடியாக இக்கிளையின் ஆலோசனைச்சபைத் ... பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரியுள்ளனர். (ஈ)

## கருத்தரங்கு

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் புவியியல் மன்றம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 6-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கலாநிதி கா. சிவத்தம்பி, திரு. மதனாகரன், கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு டொமினிக் ஜீவா ஆகியோர் கலந்துகொள்வர். (க-ஈ)

## பிரியாவிடையும் பாராட்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபராயிருந்து அனுராதபுரம் கல்வித்திணைக்களத்திற்குக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் ஜனாப் எம். எம். குத்தூஸுக்கு யாழ்ப்பாணம்-வேலணை-மண்கும்பான் வெள்ளைக் கடற்கரைப்பள்ளிவாசல் சபையினர் பாராட்டும் பிரிவுபசாரமும் அளித்தனர். இவ்விழாவில் காணி அதிகாரி ஜனாப் எம். எம். மக்பூல், ஜனாப் எம். எஸ். மதார், மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம் ஜி. பஷீர், செயலாளர் ஜனாப் கே. எம். மீராஸ் முகைதீன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (அ-க)


NIKONA SALES

கடைகளுடன்விசாலமான காணி
விற்பனைக்குண்டு

பலாலிவீதி கோண்டாவில் 3-ம் கட்டை, இ.போ.ச. டிப்போ விற்கு எதிராக அமைந்துள்ள 110 அடி, பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 5 பரப்பு நிலமும் மூன்று கடைகளும், கிணறும், அடங்கிய காணித்துண்டொன்று விற்பனைக் குண்டு.

மூன்று புதிய கடைக்கட்டடங்களுடன் 1½ பரப்புக் காணியை ஒரு துண்டாகவும், 75 அடி முகப்புக் கொண்டதும் புதிய கிணற்றுடன் கூடியதுமான 3½ பரப்பு வெறுங்காணியாகவும், இருதுண்டுகளாக விற்கும் ஒழுங்குகளும் உண்டு.

தொடர்புகொள்ளவும்:
எஸ். நரசிங்கம் J. P.
"நிக்கோந ஏல நிலையம்"
1-ம் மாடி,
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



அபிஷேகத் திரவியங்கள்
சந்தனக்குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)
0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்
வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
0 "ராதா" பத்மினி ஐவ்வாது பத்தி
0 99 — 999 ஐவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்
விளவு சூடம், சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின் தயாரிப்புகள் மலிவாக கிடைக்கும்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)
53, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பஞ்சிலே நெருப்பு வைக்கப் பெரிய தீப்பந்தம் அவசியமில்லை. ஒரு சிறு கங்கு போதும். அதுபோல் குரோதத்தை வளர்க்க ஒரு சிறு ஆசை போதும். -டூமாஸ்.


# ஈழநாடு

(3—6—74)


## அகலமும் ஆழமும்கொண்ட இயக்கம்

'கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு. அவற்றின் எழுச்சியிலேதான் நாட்டின் பொருளாதார விடுதலை தங்கியுள்ளது. சிரமதானஇயக்கம் நாட்டின் எழுச்சியைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது'.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் இந்தக் கருத்தை வற்புறுத்தியவர் இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவத் துறைத்தலைவர் பேராசிரியர் ஏ. டி. பி. ஜெயத்திலகாவென்ருல், இலங்கை சர்வோதயசங்கம் எவ்வளவு பலமடைகிறதென்பதைக் காட்டுகின்றது.

தென்னிலங்கையில் இருந்துவந்த 200 பிரதிநிதிகளுட்பட ஏராளமானேர் கலந்துகொண்ட இச்சம்மேளனம்மாநாட்டின் நிகழ்ச்சிகளை அவதானித்தவர்களுக்குஇந்தஇயக்கம் அகலமாகவும் ஆழமாகவும் வளருமென்ற நம்பிக்கை ஏற்படும்.

சர்வதேச புகழ்பெற்ற சிரமதானத் தலைவர் திரு ஆரியரத்ன குறிப்பிட்டது போல், ஐந்து வருடங்களுக்குமட்டும் மக்களைப்பற்றிச் சிந்திக்கும் அரசியல்வாதிகளால் நாடு எப்படி முன்னேற முடியும்? தென்னிலங்கைமக்கள் இக்கேள்வியை முன்வைத்தே இன்றைய நெருக்கடியை உணரத் தொடங்கிவிட்டனர்.

இந்த உண்மை இம்மகாநாட்டில் பிரதிபலித்திருப்பது நாட்டில் ஒருபுதிய திருப்பத்தைக் கொண்டு வரவல்லது. சர்வோதய நோக்கை உலகுக்கெடுத்தருளிய மகாத்மாவின் இயக்கம் உடல் உழைப்பின் மகத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. புத்தபிரான், பிபிலிய வேதம் ரஷ்ய பேரறிஞர் டால்ஸ்டாய், இவையெல்லாம் இந்த உண்மையையே இடித்துரைக்கின்றன.

இக்கருத்து தமிழ்மக்களுக்கோ அல்லது அவர்களின் நாகரீகத்துக்கோ புதிதானதல்ல. அறிவால், உணர்வால் தொண்டுசெய்தால் மட்டும் போதாது. உடலுழைப்பாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதே பழங்காலக் கோயில் வழிபாட்டில் அமைந்திருந்தது. அவ்வாறு பண்டைக் கால கோயில்வழிபாட்டில், உடலுழைப்பின் பெருமை விளங்க வாழ்ந்து காட்டிய சிறப்பு அப்பர் பெருமானுக்கு உண்டு. கையிலே உழவாரம் ஏந்தி ஊர்ஊராகச் சென்று, ஆங்காங்கே கோயில் தோறும் கல்லும் புல்லும் ஒதுக்கித் தூய்மைப் படுத்தியவர் அவர் இதுபதின்மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது.

இன்றைய அரசியலும், அதன் விளைவால் மக்கள் படும் அவஸ்தையும் இப்பெரியார்கள் காட்டிய நந்நெறிக்கு மக்களைத் தவிர்க்க முடியாத வகையில் திருப்புகின்றது.

குலைந்த தேசிய ஒற்றுமைக்கும், இன, மொழி, மத பேதங்களுக்கும் பூசல்களுக்கும் இந்த இயக்கம் விடிவு காணமுடியுமென்ற நம்பிக்கை ஒளி மிளிரத் தொடங்கியிருக்கின்றது.

சத்தியம், அஹிம்சை, தன்னலமின்மை என்ற அடிப்படைத் தத்துவங்களின் மீது கட்டி எழுப்பப்படும் சர்வோதய உலகம் உதயமாவதற்கு இந்த இயக்கம் இலங்கை முழுவதிலும் அகலமாகவும், ஆழமாகவும் வளரவேண்டும்.

நடக்குமா என்று நளினம் பண்ணும் பேர்வழிகள் இன்றும் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான கிராமங்களில் வேரூன்றெடுத்து ஊன்றி நிற்கும் இவ்வியக்கத்தின் வருங்காலம் பிரகாசமானது என்ற அறிகுறியை உணர்த்துகிறது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மகாநாடு.

## தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை

## புதிய நிர்வாகிகளை தெரிய உத்தரவு

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு முறையற்றது என்றும், உடனடியாகப் பொதுச்சபையைக்கூட்டி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும்படியும் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் யாழ் மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலைச்சங்க நிர்வாகிகளுக்கு எதிராக திருவாளர்கள் வைரமுத்து, சிவசுப்பிரமணியம் ஆகியோரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு சென்ற பெப்ரவரி மாதம் மூன்ரும் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படமுன்னர் ராஜினுமாச் செய்த பழைய நிர்வாகசபை உறுப்பினர்கள் ஏழுபேரும் புதிய நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்படக் கூடாது என தலைமைவகித்த கூட்டுறவு உதவி ஆணையாளர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகளாக 21 பேர் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்கள் பழைய நிர்வாக சபையில் அங்கம் வகிக்காதவர்கள். இதனை ஆட்சேபித்து ரி.சிவலிங்கம் என்பவர் கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கு மனுச்செய்திருந்தார். இம்மனுவை ஏற்ற கூட்டுறவு ஆக்க ஆணையாளர், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட முன்னர் ராஜினுமாச்செய்த பழைய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஏழு பேரும் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்படக்கூடாது என யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அளித்த தீர்ப்பு முறையற்றதென்றும், 3-2-74ல் நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவு பெறுமதியற்றதும் அதிகாரமற்றதுமென்றும் பொதுச்சபையைக் கூட்டி புதிய நிர்வாகிகளை தெரிவுசெய்யும்படியும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட முன்னர் ராஜினுமாச் செய்த பழைய நிர்வாகசபை உறுப்பினர்கள் ஏழுபேரும் புதிய நிர்வாக சபையிலும் தெரிவு செய்யப்படலாமென்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.
The Eelanadu P O Box No 49, Jaffna. Telegram "Eelanadu" Telephone: 389.

# சர்வோதய இயக்கமே எமது பிரச்சினைகளைத் தீர்க்கும்

## சர்வோதய மாநாட்டில் பேராசிரியர் தேரோ

புங்குடுதீவு, ஞாயிறு

'பௌத்தமும் இந்துமதமும் ஒரு வயிற்றில் உதித்தவை. இவற்றைக் கடைப்பிடிக்கும் எங்களிடையே எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது. ஆனல் துரதிர்ஷ்டவசமாக எங்களுக்குள் நாங்களே பேதங்களைக் கற்பித்துக் கொள்கின்ருேம். எங்கள் கலாச்சாரங்களோடு புதுமையான மாற்றங்களையும் நாம் வரவேற்கின்ருேம். நல்லனவற்றைத் தெரிந்தெடுத்து அதன் வழிநடப்போம்.'

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக வித்தியாலங்கார வளாகப் பேராசிரியர் வண. கலாநிதி கெவன்பொல தேரோ இன்று பிற்பகல் திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளன மகாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாம் அன்பை அடிப்படையாகக் கொண்டு பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். உண்மையாக மக்கள் பிரச்சினை தீர்க்கப்படுமென்ருல் அது சர்வோதய அமைப்பினுல்தான் முடியும். தென்னிலங்கையைப் பொறுத்தவரை திரு. ஆரியரத்னு தலைமையிலான நமது இயக்கமே எதிர்காலத்திற்கு உத்தரவாதமளிக்கக் கூடியது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

'ஆரம்பகாலந் தொட்டு தேசியக்கல்வி இந்த நாட்டிலே போதிக்கப்படாததின் விளைவையே 1971ல்ஏற்பட்ட கிளர்ச்சியின்போது நாம் கண்டோம். அந்நியக்கல்வி முறையே இதற்குக் காரணம். சுயமாக முயற்சித்து வேலை தேடி சொந்தமான பொறுப்பான வாழ்வு நடத்தக்கூடிய முறையிலே நம் எதிர்காலச் சந்ததி உருவாக வேண்டுமானுல் சர்வோதய அடிப்படைக் கல்வியே நாடு முழுவதும் போதிக்கப்பட வேண்டும். இத்தகைய கல்வியைத் தொடர்ந்து பாஷைப் பிரச்சினை படிப்படியாக தீர்க்கப்படும். அன்பை அடிப்படையாகக் கொண்ட சர்வமதங்களும் எங்களுக்குச் சம்மதம். முழு இலங்கை ரீதியிலும் நாம் சிந்தித்து நாட்டின் ஒவ்வொருவரதும் குறைகளையும் பிரச்சனைகளையும் நேரில் அறிந்து மனிதாபிமானத்துடன் அவற்றைத் தீர்த்து வைக்க நாம் முன்வர வேண்டும். இதற்கு சர்வோதய இயக்கம் முழு இலங்கையிலும் பரவி நிலைபெறவேண்டும். இவ்வியக்கத்தினுலேயே எமது நாடு சகல பிரச்சனைகளுக்கும் தீர்வுகண்டு ஒருமைப்பாட்டுடன் திகழ முடியும்' என்ருர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. என். சபாரத்தினம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி பி. ஆறுமுகம், வித்துவான் பொ. அ. கனகசபை, திரு. எஸ் ஆர். கனகநாயகம், ஜனுப் எம். எல். ஏ. ஜாபீர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

நாடெங்கிலுமுள்ள சர்வோதயப் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானேர் கலந்து கொண்ட இம்மகாநாட்டின் இறுதியில் சர்வோதய சிறுவர் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [புங். தி]

## இன, மொழிப் பிரச்னை தீர இ. மு. எ. சங்கம் திட்டம்

கொழும்பு, ஞாயிறு

'இனப்பிரச்னைக்கும் மொழிப்பிரச்னைக்கும் ஒரு நியாயமான தீர்வு காணுபதற்கான 12 அம்சத் திட்டமொன்றை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வகுத்தளிக்கவிருக்கிறது. இதுசம்பந்தமாக தமிழ்-சிங்கள வெகுஜன இயக்கமொன்றையும் உருவாக்கவிருக்கிறது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அண்மையில் நடத்தவிருக்கும் தமிழ்-சிங்கள எழுத்தாளர் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டு நோக்கம் பற்றி விளக்கி வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் சங்கச்செயலாளர் திரு. பிரேம்ஜி ஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இனப்பாகுபாடும், இனப்பகைமையும், இனவாதமும் சமூதாயவளர்ச்சியின், மனிதகுல ஒருமைப்பாட்டின் விரோதநிலைபாடுகளாகும்.

இனப்பிரச்னைக்கும் மொழிப்பிரச்னைக்கும் ஒரு நியாயமான தீர்வு காண்பதற்காக 12 அம்சத் திட்டமொன்றை நாம் முன்வைத்துள்ளோம். இது இன்றைய நிலைக்கு ஏற்றது என்றும், நடைமுறைச் சாத்தியமானது என்றும், பின்னர் இப்பிரச்னைகளுக்கு உயர் வடிவத்தீர்வு காண இது வழி வகுத்துக் கொடுக்குமென்றும் நாம் நம்புகிருேம். இத்திட்டம் சம்பந்தமாக நாம் ஏற்கனவே சிங்கள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களைப் பெருவாரியாகக் கொண்ட ஆறு ஸ்தாபனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளோம். பல தொழிற்சங்கத தலைவர்களுடனும் சமுதாய ஆர்வலர்களுடனும் கலந்தாலோசிததுள்ளோம். இவர்கள் எல்லோருமே எமது திட்டததிற்குபொதுப்படையான ஒப்புதலையும் ஆதரவையும் தெரிவிததுள்ளனர். இந்தத் திட்டததை மேலும் விருததி செய்யக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. இந்தத் திட்டம் மாநாட்டில் தமிழ்-சிங்கள எழுத்தாளர்களால் அங்கீகரிக்கப்பட்டபின்னர் தேசிய அங்கீகாரததிற்காகவும் அமுலாக்கததிற்காகவும்அரசிடம்சமர்ப்பிக்கவிருக்கிருேம். இத்திட்டம் ஏறததாழ ஏற்றுக்கொள்ளப்படுமென்று நாம் நம்புகிருேம். (அ)

—

### ரதோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ரதோற்சவம் இன்று காலை நடைபெறுகிறது.

## சைவ அநாதை இல்லம்: 6-ம் திகதி அடிக்கல் நடப்படும்

கேதீச்சரம், ஞாயிறு

சைவ அநாதைகள் பாதுகாக்கப்படுப் பராமரிக்கப்படும் நோக்கத்தை மையமாகக்கொண்டு கைதடியில் கண்டி வீதிக்கு அருகாமையில் கைதடி இந்து வாலிபர் சங்கம் சைவஅநாதை நிலையமொன்றை அமைத்துச் சேவைசெய்ய முன்வந்துள்ளது. கிட்டத்தட்ட பத்து லட்ச ரூபா செலவில் நிறுவப்படவுள்ள இந் நிலையத்திற்கு அரசாங்கம் இரண்டு ஏக்கர் நிலத்தை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா இம்மாதம் 6-ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல்அமரசேகரா தலைமையில் நடைபெறவிருக்கிறது. வடமாநிலக்கல்விஅதிபர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் பாடசாலை மாணவர் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலிலிருந்துகூட்டுப் பிரார்த்தனையுடன் ஊர்வலமாகச் செல்வார்கள். சிவநெறிப் புரவலர் திரு க. கனகராசா மங்கள விளக்கேற்றுவார். யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை ஆய்வுரை நிகழ்த்துவார். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் திருவுருவப் படத்திற்குப் பூசை இடம்பெறும்.

### கலைஞர்கள்.,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆற்றியுள்ள சேவைகள் மகிழ்ச்சிக்குரியது. சகல கலைஞர்களின் சங்கங்களைக்கொண்ட ஒருமகாமன்றம் உதயமாகவேண்டும்.'' மேன்றம் நடத்தி இசைப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கு திருமதி அமரசேகரா பரிசுகளை வழங்கினர். (அ)

### வேலை செய்து கொண்..

(1-ம் பக்கத தொடர்ச்சி)

சபைக்கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு ஆணையாளர் நடவடிக்கை எடுததுள்ளார்.

தற்பொழுது 20 வீத சம்பள உயர்வை அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்ததைக்கூட பல சங்கங்கள் அமுல் நடததியும் இச்சங்கம் அதைச்செய்யாததால் தாம் மேலும் பாதிக்கப்பட்டுவருவதாகவும் இந்த ஊழியர்கள் தமது கடிததததில் சுட்டிக்காட்டியுள்ளனர், (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org